முன்னிலை வகித்தார். தொடர்ந்து மேற்கு மண்டலத்துக்குட்பட்ட 74 வது வார்டு செல்வம்பதி ஏரியில் மரக்கன்றுகள் நடும்

எஸ்.புரம் லோகமான்யா வீதியில் மின்னணுக் கழிவுகள் சேகரிக்கும் பணி குறித்தவிழிப்புணர்வுநிகழ்ச்சியை மேயர்தொ

செல்வன்,துணை ஆணையாளர் ஷர்மிளா ,மேற்கு மண்டலத் தலைவர் தெய்வானை, தமிழ்மறை உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# ஆராய்ச்சி தொண்டு நிறுவனம் சார்பில் முப்பெரும் விழா!

**கோவை,ஜூன்.26–**

தமிழகத்தில் உள்ள டுசீன் தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட அனைத்து குழந்தைகளை கண்டறிந்து அடுத்த தலைமுறைக்கு இந்நோய் வராமல் தடுப்பதே எம்டிசி ஆர்சி யின் முக்கிய நோக்கமாகும்.

ஒவ்வொரு வருடமும் எம்டிசிஆர்சி யில் டுசீனால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் குடும்பங்களுக்கு அன்னையர் தினம்,தந்தையர் தினம் மற்றும் யோகா தினம் போன்ற சிறப்பு தினங்கள் கடந்த 2017 முதல் விரரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது. கொரோனா காரணமாக தடைப்பட்டிருந்த நேரடி நிகழ்ச்சிகள் இந்த வருடம் எம்டிசிஆர்சியில் திட்டமிட்டபடியே முப்பெரும் விழா கொண்டாடப்பட்டது.

இதில் டுசீனால் பாதிக்கப்பட்ட குழந்தைகளும், குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.இந்த விழாவில் முனைவர் ஜெயந்தஸ்ரீபாலகிருஷ்ணன்( பேராசிரியர் தன்னம்பிக்கை பேச்சாளர்)மருத்துவர் சசித்ரா தாமோதரன் (மகப்பேறு தன்னம்பிக்கை பேச்சாளர்,எழுத்தாளர்) மருத்துவர் சுப்பிரமணியன் (யோகா மற்றும் இயற்கை மருத்துவர் ஆகியோர் பங்கேற்றனர். முப்பெரும் விழாவை எம்டிசிஆர்சி டாக்டர் பி.ஆர்.லட்சுமி தொடங்கி வைத்து பேசினார்.

மேலும் தந்தையர்களும் தாய்மார்களும் கலந்துரையாட ஆதரிக்கும் மன்றம் நடைபெற்றது.

இறுதியில் குழந்தைகள் மற்றும் பெற்றோர்களுக் கானசிறுநடனநிகழ்ச்சிகள் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.